பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 01 ஞாயிற்றுக்கிழமை 15.06.2025 கதிர் 218

### இது ரகசியம் அல்ல!

நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கம் என்ன என்றொரு சொலவடை தமிழில் உண்டு. அதுபோன திருட்டு, மோசடி என்று முடிவு செய்தன ☞ 2

# பொய்யும் ஊழலும் நிறைந்த முறையையே இன்றைய ஆளும்தரப்பும் பின்பற்றுகின்றது

## இதுவா முறைமை மாற்றம் என்று சஜித் பிரேமதாச சீற்றம்

நாட்டில் இதற்கு முந்தைய ஆட்சி காலங்களில் பொய்களும் ஊழல் மோசடிகளுமே நடைமுறையிலிருந்ததாக தற்போதைய ஆளும்தரப்பு குற்றஞ்சாட்டியது. ஆனால் அதே முறைமையையே இந்த ஆளும்தரப்பும் பின்பற்றுகின்றது. இதுவா மக்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட முறைமை மாற்றம் ? என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கேள்வியெழுப்பியுள்ளார்.நேற்று ☞ 2

# துரோகியென முத்திரைக்குத்தப்பட்ட தரப்புடன் அதிகாரத்துக்காகச் சேர்வது சாக்கடை அரசியல்

## அமைச்சர் சந்திரசேகரன் காட்டம்

தமிழ்த் தேசியப் பரப்பில் இருந்து ஓரங்கப்பட்ட - துரோகியென முத்திரைக்குத்தப்பட்ட தரப்புடன், அதிகாரத்துக்காக கூட்டு சேர்வது சாக்கடை அரசியலாகும். அப்படியான அரசியலை முன்னெடுக்கும் தரப்பின் முகத்திரை ☞ 6

# மருந்துப் பிரச்சினைக்கு உடனடி தீர்வு வேண்டும்

## எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

நாட்டில் பல அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றன. இந்தப் பிரச்சினைக்கு ஆளும்தரப்புவிரைந்துதீர்வுகாணவேண்டும். ☞ 6

### காஸாவில் இடம்பெறும் இனவழிப்பில்

# ‘அமெரிக்காவே குற்றவாளி’ தூதரகம் முன் போராட்டம்

காஸாவில் இடம்பெற்றுவரும் இனவழிப்புக்கு எதிராக நேற்றைய தினம் அமெரிக்கத்தூதரகத்துக்கு முன்பாக ஒன்றுகூடி எதிர்ப்பை வெளிப்படுத்திய செயற்பாட்டாளர்கள், அமெரிக்காதான் பிரதான ☞ 6

# ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் யாழ்., திருகோணமலைக்கும் வருகை

ஆளும்தரப்பின் அழைப்பின்பேரில் ஜூன்23நாட்டுக்குவருகைதரவுள்ளஐக்கிய நாடுகள்மனிதஉரிமைகள்உயர்ஆணையர் வோல்கர் டேர்க், கொழும்பில் உயர்மட்ட சந்திப்புக்களைநடத்தவிருப்பதுடன் கண்டி, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கும் பயணம் ☞ 2

# ஐ.நா. உயர் ஆணையர் செம்மணி புதைகுழியை நேரில் பார்க்கவேண்டும்

## வடக்கு கிழக்கு பொது அமைப்புக்கள் வலியுறுத்து

இலங்கை வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஆணையர் செம்மணி, சிந்துப்பாத்தியில்புதிதாகஅகழப்பட்ட மனிதப் புதைகுழியிடத்தை நேரில் பார்வையிடவேண்டும் என்று வடக்கு கிழக்கு பொது அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ள ஐக்கிய நாடுகளின்மனிதஉரிமைகளுக்கான உயர் ஆணையர் வோல்கர் துர்க் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்களைச் சுட்டிக் காட்டி வடக்கு கிழக்கு சிவில் அமைப்புகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அமைப்புகளால் கடிதம் ஒன்று ☞ 2 அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# மொஹமட் ருஷ்டியின் உரிமைகள் மீறப்பட்டன

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவிப்பு

இஸ்ரேலுக்கு எதிராக ஸ்டிக்கர் ஒட்டியமைக்காக பயங்கரவாதத்தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டதன் மூலம் மொஹமட் லியதீன் மொஹமட் ருஷ்டியின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்பில் எதிர்ப்பை வெளிப்படுத்தி ஸ்டிக்கர் ஒட்டியமைக்காக மொஹமட்ருஷ்டிகடந்தமார்ச்22ஆம்திகதி பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் ☞ 2

# ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு வலுவான தலைமைத்துவம் தேவை

## பாதுகாக்கும் கடப்பாட்டுக்கான உலகளாவிய நிலையம் சுட்டிக்காட்டு

இலங்கை விவகாரத்தில் ஐ.நாவின் நடவடிக்கைகள் தொடர்பான உள்ளகப் பகுப்பாய்வு அறிக்கையானது ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கான வலுவான தலைமைத்துவம், செயற்திறன்மிக்க ஒருங்கிணைப்பு, மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மீறல் தடுப்பு என்பவற்றின் உடனடித் தேவைப்பாட்டை உணர்த்துகின்றது என பாதுகாக்கும் கடப்பாட்டுக்கான உலகளாவிய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

சமகாலத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்புநாடுகள் செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் சுட்டிக்காட்டி பாதுகாக்கும் கடப்பாட்டுக்கான உலகளாவிய நிலையத்தினால் உறுப்புநாடுகளுக்கு ☞ 2 அனுப்பிவைக்கப்பட்டுள்ள

# உயிர்களைப் பாதுகாக்கும் நோக்கோடு வீதியில் பொறுப்புடன் செயற்படுங்கள்

## பிரதமர் ஹரினி அறிவுரை

உயிர்களைப் பாதுகாப்பதை தமது பொறுப்பாக கருதி வீதி விபத்துகளைத் தடுப்பதற்குப் பொறுப்புடன் செயற்படவேண்டும்என்றும்சட்டங்களினால்மட்டுமன்றி சிறந்த தெளிவோடு அதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கல்வி உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்ளின் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் மற்றும் இலங்கை பொலீஸ் இணைந்து ‘‘ வீழிஉவ உழிஷள - வீதியைப் பாதுகாப்போம்‘ என்ற கருப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்த வீதி விபத்து தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் தொடக்க நிகழ்வு வெள்ளிக்கிழமை கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைபொலீஸ்உத்தியோகத்தர்கள் வீதி விபத்துக்களைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வுநிகழ்ச்சியினை பாடசாலை மாணவர்களுக்குநடத்தினர்.இருபத்தைந்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் இருபத்தைந்து ☞ 6

# இனவாதத்தைத் தூண்டுவதாகக்கூறி என்னைக் கைது செய்வதற்கு முயற்சி

## உதய கம்மன்பில பதற்றம்

அரசுத்தலைவர் தனது ஜேர்மன் விஜயத்தின்போது விடுதலைப் புலிகள் அமைப்பின் நெடியவன் என்பவரை சந்திக்கவிருப்பதாக சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியாகியிருப்பதாக நான் தெரிவித்திருந்தேன். அதனை அடிப்படையாக்க கொண்டு நான் இனவாதத்தை தூண்டுவதாகக் குறிப்பிட்டு என்னை கைது செய்வதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. சிறையிலடைப்பதாகக் கூறியோ சுட்டுக் கொல்வோம் எனக் கூறியோ என்னை அச்சுறுத்தி என் குரலை ஒடுக்கமுடியாதுஎனமுன்னாள் ☞ 6

# உள்ளூராட்சிமன்ற ஆணையர்கள் சர்வாதிகள் போன்று செயற்பாடு

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

உள்ளூராட்சிமன்றங்களுக்கான தலைவர்கள், பிரதி தலைவர்களை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின்போது குறித்த உள்ளூராட்சிமன்றங்களுக்கான ஆணையாளர்கள் சர்வாதிகாரத்துடன் செயற்படுகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது. இவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உகறுப்பினர் நளின் பண்டார எச்சரித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை குருணாகலில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது: ☞ 6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பின்னர் யாரிடம் திருடினால் என்னவென்ற போக்கில் செயற்படுவது தொடர்பான தகவல்களைக் கேட்கையில் மனம் பதறுகின்றது.

ஜூன் 13 கொழும்பு, கொலன்னாவ பிரதேசத்தில் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர். அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு 37 லட்சத்து 81 ஆயிரம் ரூபாயைத் திருடிவிட்டார் என்பது. அந்தப் பணத்தை அவர் எங்கிருந்து திருடினார் என்கிறீர்கள்? அரசினால் முதியவர்கள், வலுவிந்தோர் போன்றவர்களுக்கு வழங்கப்படும் மிகச் சிறிய உதவித் தொகையிலிருந்தே இந்தப் பணம் திருடப்பட்டுள்ளது. உள்ளூர்வாசிகளால் 'பிச்சைச் சம்பளம்' என்று சொல்லப்படும் பணத்திலிருந்தே இவ்வளவு பெரிய திருட்டு நடத்திருக்கின்றது.

கொலன்னா பிரதேச செயலகத்தின் நலன்புரி கொடுப்பனவில் ரூ.37,81,000 மோசடியாக வேறு கணக்குகளில் வரவு வைக்கப்பட்டதன் மூலம் இந்த நிதி முறைகேடு செய்யப்பட்டிருப்பதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்திருக்கின்றது. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட கொலன்னாவ பிரதேச செயலகத்தின் மேலாண்மை சேவை அதிகாரியை எம்பிலிப்பிட்டி பதில் நீதிவான் ஜூன் 16 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டிருப்பவர் ஒரு பெண் அதிகாரி.

எம்பிலிப்பிட்டி காவல்துறையால் நிறுவப்பட்ட சிறப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினால் அவர் ஜூன் 13 கைதுசெய்யப்பட்டார். அவர் மதுவன்வலவில் உள்ள ஒரு வீட்டில் கைதுசெய்யப்பட்டார். கொலன்னா பிரதேச செயலாளர் பிரியங்க வீரசிங்க எம்பிலிப்பிட்டி காவல்துறையின் சிறப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவில் அளித்த புகாரின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்,

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில் முதியோர் மற்றும் பிற நலன்புரி பயனாளிகளின் கணக்குகளில் பணத்தை வரவு வைப்பதற்கு பதிலாக ரூ.37 லட்சத்து 81 ஆயிரம் மோசடியாக வேறு நபர்களின் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்திற்கு தெரிவித்தனர்.

இந்த மோசடி தொடர்பாக நல வாரியம் மற்றும் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் தணிக்கை விசாரணைகளையும் தொடங்கியுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர். இருப்பினும், அந்த அறிக்கைகள் இன்னும் தங்களுக்கு கிடைக்கவில்லை என்று காவல்துறையினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

யாரிடமெல்லாம் மோசடி செய்கிறார்கள் என்று பாருங்கள். .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஐ.நா. உயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்டவர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பெண்கள் வலையமைப்புக்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கங்கள், சிவில் அமைப்புக்கள், வடக்கு கிழக்கு சமூக இயக்கங்கள். ஊடகவியலாளர்கள். என அறுபத்தைந்து சமூக ஆர்வலர்கள் மற்றும் சிவில் அமைப்புகளால் கையொப்பமிடப்பட்டு இதன் பிரதி இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் மையக் குழுவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையருக்கு வெள்ளிக்கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ள அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இதன் கீழ் கையொப்பம் இடும் நாங்கள், மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தின் முயற்சிகளையும் இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்திற்கான அதன் அர்ப்பணிப்பு மற்றும் ஆதரவையும் வரவேற்கிறோம்.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக வரலாற்றுக் காலந்தொட்டே இடம்பெற்றுவரும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களைத் தடுக்க முடியாமல் இலங்கையில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்புகள் இன்றுவரை தோற்றுப்போயே இருக்கின்றன. மாறாக இலங்கையில் ஆயுதப் போராட்டம் நிறைவுற்று 15 வருட காலங்கள் கடந்த நிலையிலும் குறிப்பாக வடக்கு கிழக்கு பிரதேசங்களிலுள்ள மக்கள் ஓர் நிழல் போரை எதிர்கொள்ளத்தக்கவகையிலேயே வாழ இந்த ஆளும்தரப்புக்களால் நிர்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இன்று வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இலங்கை அரச பொறிமுறையும் பாதுகாப்புப் பொறிமுறையும் தமிழ் மக்களை அடக்கியொடுக்கிய வண்ணமே உள்ளன. வடக்கு கிழக்கு பகுதிகளில் திட்டமிட்ட வகையில் 07 இற்கும் மேற்பட்ட அரச பொறிமுறைகளால் தமிழ் பேசும் மக்களின் குடியிருப்பு மற்றும் வாழ்வாதார நிலங்கள் தவறான நீதிப்பொறிமுறையின் ஊடாகவோ அன்றேல் எந்த சட்ட ஏற்பாடுகளும் இல்லாமலும் அரசினால் சுவீகரிக்கப்படுகின்றன. இதனால் தமிழர்கள் தங்களது பூர்வீக மண்ணைவிட்டு விரட்டியடிக்கப்படுகின்றனர்.

இந்த நடவடிக்கையானது இம்மக்களின் அடையாளங்களை அழிப்பதுடன், அரசியற் பிரதிநிதித்துவத்தினையும் கேள்விக்குறியாக்கி திட்டமிட்ட இன அழிப்பிற்குள் தள்ளும் செயற்பாடுகளென நாங்கள் உணர்கின்றோம். இன்றுவரை மனித உரிமை பாதுகாவலர்கள், செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் என பலர் இலங்கை அரசின் இராணுவ மற்றும் புலனாய்வு துறையினரால் கட்டமைக்கப்பட்ட வகையில் அச்சுறுத்தல்களுக்கும் விசாரணைகளுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அது மாத்திரமின்றி இன்றுவரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை கூற முடியாமலும் இலங்கையில் இடம்பெற்ற அனைத்துப் போர் குற்றங்கள், இனஅழிப்பு, மனிதப்புதைகுழிகள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசானது பொறுப்பு கூறாமல் இருப்பதையும், அதனை இராசதந்திர வகைகளில் தவிர்ப்பதையும் தங்களுக்குத் தெரியத்தருகின்றோம்.

குறிப்பாக இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் துஸ்பிரயோகங்களுடன் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்களுக்கான பொறுப்புக் கூறல் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பிரேரணை 46/1 இன் OSLAP திட்டக் குழுவினர் இன்றுவரை இலங்கைக்கு வருவதற்கான விசா அனுமதியினை தர மறுத்துவரும் இலங்கை, இத்திட்டத்தினை அமுலாக்க எந்த விதமான ஆதரவினையும் அறவே வழங்காத சூழ்நிலையைத் தாங்களும் அறிவீர்கள்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தாங்கள் இம்மாதத்தில் இலங்கைக்கு வருகை தரவிருப்பதாக அறிகின்றோம். எனவே தங்களின் இலங்கைக்கான பயணத்தின் போதும் அதன் பின்னரும் கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை கவனத்திற்கொள்ளுமாறு தயவாக வேண்டி நிற்கின்றோம்.

1. இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் உடலங்கள் புதைக்கப்பட்டுள்ள மனித புதைகுழிகளை நீங்கள் பார்வையிடவேண்டும். குறிப்பாக செம்மணி மனித புதைகுழி.

2. இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையையும் நீதியினையும் வழங்கக் கூடிய சர்வதேச பொறிமுறை ஊடான விசாரணையினை மேற்கொள்ள உதவுதல்

3. இறுதிப்போரில் இடம்பெற்ற முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பிரதேசத்திற்கு சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்கவேண்டும்

4. வடக்கு கிழக்கு பிரதேசங்களிலுள்ள சிவில் அமைப்புக்கள், ஊடகவியலாளர்கள், வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கப் பிரதிநிதிகளை சந்தித்து கள நிலவரங்களை அறிந்துகொள்ளவேண்டும்.

## ஐ.நா. மனித ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பொதுமக்கள் அச்சுறுத்தலுக்கோ அல்லது இனவழிப்பு, போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள், இனச்சுத்திகரிப்பு போன்றவற்றுக்கு முகங்கொடுத்திருக்கும் சந்தர்ப்பங்களில் அதில் தலையீடு செய்து, மிகமோசமான அக்குற்றங்களைத் தடுக்கவேண்டிய கடப்பாடு மனித உரிமைகள் பேரவைக்கு உண்டு. அதனை மீளுறுதிப்படுத்தும் வகையிலேயே கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 44 ஆவது கூட்டத்தொடரில் 'பாதுகாப்பதற்கான கடப்பாடு' தொடர்பான 44/14 எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது' என அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு மேற்குறிப்பிட்ட தீர்மானத்துக்கு அமைவாக மிகமோசமான குற்றங்களையும், அட்டூழியங்களையும் தடுப்பதற்கான கடப்பாட்டை உரியவாறு நிறைவேற்றுமாறும் அக்கடிதத்தின் ஊடாக பேரவையின் உறுப்புநாடுகளிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று சில சந்தர்ப்பங்களில் மிகமோசமான குற்றங்களைத் தடுப்பதற்கான அல்லது அதுகுறித்து செயற்திறன்மிக்க துலங்கலை வெளிப்படுத்துவதற்கான இயலுமை இன்மை உள்ளடங்கலாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை அடைந்த தோல்விகள், அதன் மீதான நம்பிக்கையை வெகுவாக சீர்குலைத்திருப்பதாக உறுப்புநாடுகளுக்கான கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பாதுகாக்கும் கடப்பாட்டுக்கான உலகளாவிய நிலையம், இலங்கை விவகாரத்தில் ஐ.நாவின் நடவடிக்கைகள் தொடர்பான உள்ளகப் பகுப்பாய்வு அறிக்கையானது மனித உரிமைகள் பேரவைக்கான வலுவான தலைமைத்துவம், செயற்திறன்மிக்க ஒருங்கிணைப்பு, மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மீறல் தடுப்பு என்பவற்றின் உடனடித் தேவைப்பாட்டை உணர்த்துகின்றது எனத் தெரிவித்துள்ளது.

## மொஹமட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டார். அதனையடுத்து ருஷ்டி சட்டவிரோதமான முறையில் கைதுசெய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டு அவரது தாயார் ஹனீஃபா பதுர்னிஸாவினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கப்பட்டது.

அம்முறைப்பாட்டுக்கு அமைவாகவும், தமது ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தன்னியல்பாகவும் இச்சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அவ்விசாரணைகளின் ஊடாகக் கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கி மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டிருக்கும் ஆவணத்திலேயே மொஹமட் ருஷ்டியின் மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி கைதுசெய்து, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதன் விளைவாக சட்டத்துக்கு ஏற்புடைய தொழிலில் ஈடுபடுவதற்கான சுதந்திரத்தை இழந்தமை உள்ளடங்கலாக ருஷ்டிக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்காக அவருக்கு 200,000 ரூபாவை செலுத்துமாறு ஆணைக்குழு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

அத்தோடு இப்பரிந்துரைகளை எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக நடைமுறைப்படுத்துமாறும், அதன் முன்னேற்றம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் ஆணைக்குழு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளது.

## ஐ.நா. மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யவுள்ளார்.

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு முடிவுக்குக்கொண்டுவரப்பட்ட மூன்று தசாப்தகால போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான மிகமோசமான மீறல்கள் தொடர்பில் இன்னமும் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்டு, பின்னர் காலநீடிப்பு செய்யப்பட்ட தீர்மானத்தின் ஊடாக நாட்டில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் 'பொறுப்புக்கூறல் செயற்திட்டம்' முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை ஆளும்தரப்பின் அழைப்பின்பேரில் ஐக்கிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஆணையர் வோல்கர் டேர்க் எதிர்வரும் 23 - 26 ஆம் திகதி வரை உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதரவுள்ளார்.

ஆனால் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் செப்டெம்பர் மாதக் கூட்டத்தொடருடன் இலங்கை குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முடிவுக்குவரவுள்ள நிலையில், அதற்கு முன்பதாக மனித உரிமைகள் உயர்ஆணையர் நாட்டுக்கு வருகைதருவது செப்டெம்பரில் அவர் வெளியிடவுள்ள இலங்கை தொடர்பான அறிக்கையின் காத்திரமான தன்மையை மலினப்படுத்தும் என்ற கரிசனையின் அடிப்படையில் அவரை இப்போது நாட்டுக்கு வருகைதரவேண்டாம் என வலியுறுத்தி உள்நாட்டில் இயங்கிவரும் 104 சிவில் சமூகப்பிரதிநிதிகளின் கூட்டு, சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களின் கூட்டு, தமிழ் சிவில் சமூக அமையம் மற்றும் வட, கிழக்கு வலிந்துகாணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ஆகிய நான்கு தரப்புக்கள் தனித்தனியாக 4 கடிதங்களை உயர்ஸ்தானிகருக்கு அனுப்பிவைத்திருந்தன.

இருப்பினும் அவரது வருகை பெருமளவுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இதன்போது அவர் கொழும்பில் அரசுத்தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரினி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத், தலைநகரைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை முன்னெடுக்கவுள்ளார்.

அதனைத்தொடர்ந்து கண்டி, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கும் அவர் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இதன்போது குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சிவில் சமூகப்பிரதிநிதிகளை சந்திக்கவுள்ள அவர், தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை இலங்கைக்கு வருகைதரும் பட்சத்தில் முள்ளிவாய்க்காலுக்கு பயணம் செய்யுமாறுகோரி வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் உயர்ஆணையர் வோல்கர் டேர்க்குக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்த போதிலும், அவரது முள்ளிவாய்க்கால் பயணம் இன்னமும் உறுதியாகவில்லை.

மேலும் ஆரம்பத்தில் 23 - 25 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குத் திட்டமிடப்பட்டிருந்த அவரது விஜயத்தில் யாழ் பயணம் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை எனவும், பின்னர் சிவில் சமூகப்பிரதிநிதிகள் மத்தியில் வலுவடைந்த எதிர்ப்பை அடுத்தே அவர் நாட்டில் தங்கியிருக்கும் காலப்பகுதி 26 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு, அதில் யாழ் விஜயமும் உள்வாங்கப்பட்டதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

## பொய்யும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனிக்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டு எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார். அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் முறைமை மாற்றத்தை ஏற்படுத்துவதாக ஆளும்தரப்பு மக்களுக்கு வாக்குறுதியளித்தது. ஆனால் இன்று ஜனாதிபதியின் அனுமதியுடன் கைதிகளை விடுதலை செய்வதற்கான முறைமை நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஜனாதிபதி உட்பட பொறுப்பு கூற வேண்டியவர்களுக்கு கூட தெரியாமல் சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருப்பதாகவே தகவல்கள் கிடைத்துள்ளன.

துறைமுகத்திலிருந்து சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த 323 கொள்கலன்களும் இவ்வாறுதான் விடுவிக்கப்பட்டுள்ளன. இங்கும் முறைமையில் மாற்றம் ஏற்படவில்லை. அரசுத் தலைவரின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படும் கைதிகள் யார் என்பது தொடர்பில் அரசுத் தலைவருக்கே தெரியவில்லை என்றால், மேற்கூறப்பட்ட 323

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# ஜேர்மன் கைத்தொழில் துறையினருடன் அரசுத் தலைவர் அநுர சந்தித்துப் பேச்சு

ஜேர்மன் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் ஏற்பாடு செய்த வர்த்தக மன்றம் வெள்ளிக்கிழமை பிற்பகல் அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க தலைமையில் ஜேர்மன் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இங்கு தலைமை உரை ஆற்றிய அரசுத் தலைவர் இலங்கையின் பொருளாதார மாற்றம் முதலீட்டு வாய்ப்புகள் இலங்கையின் அபிவிருத்தி திறன்கள் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையில் புதிய வர்த்தக உறவுகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் குறித்து தனது கருத்துகளைத் தெரிவித்தார்.

குறிப்பாகத் தற்போதைய உலகளாவிய பொருளாதாரப் போக்குகளின்போது இலங்கை எடுத்துள்ள சாதகமான நடவடிக்கைகள் மற்றும் பொருளாதாரச் சவால்களை வெற்றிகொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் உரையில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

'இலங்கையின் எதிர்காலத்தை வடிவமைத்தல் பொருளாதார மறுசீரமைப்புகள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள்' என்ற தலைப்பில் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத் உரை நிகழ்த்தினார்.

இங்கு ஜெர்மன் நிறுவனங்களால் உற்பத்தி மூலங்கள் மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி சுற்றுலாத்துறை விநியோகம் மற்றும் போக்குவரத்து தொழில் பயிற்சி தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பு போன்ற விடயங்கள் குறித்து பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டன. இதற்காக உயர் மட்ட ஜெர்மன் நிறுவனங்கள் பங்கேற்றன.

வெளிநாட்டலுவல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஜெர்மனிக்கான இலங்கைத் தூதுவர் வருணி முதுகுமாரன, இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத், வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா பிரிவின் பணிப்பாளர் நாயகம் சுகீஷ்வர குணரத்ன, ஜேர்மன் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் கலாநிதி வோல்கர் ட்ரியர், ஜெர்மன் கூட்டாட்சி பொருளாதார விவகாரங்கள் மற்றும் காலநிலை நடவடிக்கைக்கான தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் மற்றும் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து உள்ளிட்ட ஓசனியா பிராந்தியத்தின் பகுதித் தலைவர் டோபியஸ் பியர்லிங்ஸ் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

## வாழ்வில் வரமே அப்பா ஆவார்!



பெற்றிடுவார் அம்மா பேணிடுவார்
உற்றதுணை அம்மா
உறுதுணையோ அப்பா
வற்றாத ஊற்றாய் இருந்திடுவார்
அப்பா
மாநதியே அப்பா வழங்கிடுவார்
அன்பை

புல்லாங் குழலாய் இருப்பார்
அம்மா
புறப்படும் இசையாய் அமைவார்
அப்பா
நல்ல உள்ளம் கொண்டவர் அப்பா
நாளும் வாழ்வின் துணையே
அப்பா

மரமாவார் அம்மா வேராவார்
அப்பா
கனியாவார் அம்மா சுவையாவார் அப்பா
கொடியாவார் அம்மா கொம்பாவார் அப்பா
மொட்டாவார் அம்மா மலர்ந்திடுவார் அப்பா

வெள்ளை மனதைக் கொண்டவர் அப்பா
கள்ளங் கபடம் தெரியார் அப்பா
தன்னை மறப்பார் தன்வலி பொறுப்பார்
பிள்ளை வேதனை பொறுக்கார் அப்பா

தோழில் ஏற்றிச் சாமி காட்டுவார்
புரியா வயதில் புதினம் பார்ப்போம்
சாமியே தோழில் சுமந்துமே நின்று
சாமியைக் காட்டிய தத்துவம் தந்தையே

உயரம் தொட்டிட உழைப்பார் அப்பா
உழைப்பை உண்மையைக் உரமாய்க் கொள்வார்
அயரா இருந்து அனைத்தும் ஆற்றுவார்
அனைத்தும் பிள்ளைக்கே என்றே எண்ணுவார்

நல்ல ஆசானைத் தேர்ந்துமே எடுத்து
பிள்ளையை அவரிடம் சேர்த்துமே விடுவார்
நல்ல பிள்ளையாய் வல்ல பிள்ளையாய்
வந்திட வேண்டி இறைவனை வேண்டுவார்

கற்றவர் சபையில் அமர்த்திடப் பிள்ளையைக்
கண்ணுள் மணியாய்க் காத்துமே நிற்பார்
பட்டங்கள் பெற்றுப் பிள்ளை வந்தால்
பிறந்ததன் பயனை அடைந்ததாய் எண்ணுவார்

வாழ்வில் வரமே அப்பா ஆவார்
வரமாய் உரமாய் வந்தவர் அப்பா
அப்பா என்றுமே ஆண்டவன் ஆவார்
அவரை வணங்குவோம் அனைத்தும் கிடைக்கும்



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண்- ஆஸ்திரேலியா

## ஜேர்மனின் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்த அநுரகுமார

இலங்கை மற்றும் ஜேர்மன் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பின் நீண்ட வரலாற்றை நினைவுகூர்ந்த அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க, இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் போன்ற தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கும் மற்றும் சுகாதாரம் போன்றதுறைகளின் முன்னேற்றத்திற்காகவும் ஜெர்மனி வழங்கும் பங்களிப்புக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

ஜெர்மனிக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள அரசுத்தலைவர் அநுரகுமார திசநாயக்க வெள்ளிக்கிழமை பிற்பகல் பெர்லினின் வெல்டொப் எஸ்டோரியா ஹோட்டலில் ஜெர்மன் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சர் ரீம் அலபலி-ரடொவனை சந்தித்துக் கலந்துரையாடினார்.

உலகளாவிய புதிய பொருளாதாரப் மாற்றங்களின்போது இரு நாடுகளும் எதிர்நோக்கும் பொதுவான சவால்கள் தொடர்பாக இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தக் கூடிய துறைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பின் நீண்ட வரலாற்றை நினைவுகூர்ந்த அரசுத் தலைவர் இலங்கை ஜெர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் (ஸீளதீயிலிஜறூளஷதுழிஐவீஊ ஐ ஈஜஷஊழியி வீஷழிஷ்ஐஷ்ஐஆ ஞூஐவிமிஷ்மிற்மிள - ஸீறூவீவீஞூ) போன்ற தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கும் மற்றும் சுகாதாரம் போன்றதுறைகளின் முன்னேற்றத்திற்காகவும் ஜெர்மனி வழங்கும் பங்களிப்புக்கு தனது நன்றியைத் தெரிவித்தார். அந்தப் பங்களிப்புகள் மற்றும் ஆர்வத்தையும் எதிர்காலத்தில் பரஸ்பரம் நன்மை பயக்கும் வகையில் மேம்படுத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

வெளிநாட்டலுவல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஜெர்மனிக்கான இலங்கைத் தூதுவர் வருணி முதுகுமாரன், வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா பிரிவின் பணிப்பாளர் நாயகம் சுகீஷ்வர குணரத்ன உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

## அவசர தேவை ஏற்பட்டால் உடன் தூதரகத்தை நாடவும்

### இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களுக்கு அறிவித்தல்

இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கிடையிலான மோதல்கள் அதிகரித்துள்ள நிலையில், இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் ஏதேனும் அவசர நிலைமை ஏற்பட்டால் அங்குள்ள இலங்கை தூதரகத்தை தொடர்பு கொள்ளுமாறு அந்நாட்டுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்த சிக்கலான சூழலில் அங்குள்ள இலங்கையர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் போது மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். மேலும் டுபாய் மற்றும் அபுதாபி விமான நிலையங்களில் தங்கியிருக்கும் இலங்கையர்களிடம் தான் தனிப்பட்ட ரீதியில் பேசினார் எனவும் அவர்களுக்குத் தற்காலிக வீசா கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களுக்கு விமான சேவை நிறுவனங்கள் தங்குமிட வசதிகளை வழங்கியுள்ளன. ஐக்கிய அரபு எமிர் இராச்சிய தூதரகம் அவர்களுடன் தொடர்ந்தும் தொடர்பில் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ஏதேனுமொரு இலங்கை பிரஜை இஸ்ரேல் மற்றும் ஈரான் மோதல்களால் காயமடைந்திருந்தாலோ அல்லது பாதிக்கப்பட்டிருந்தாலோ அவர்கள் இலங்கை தூதரகத்தை தொடர்புகொள்ள விசேட தொலைபேசி இலக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய இஸ்ரேலிலுள்ள இலங்கை தூதரகத்தின் துணை பிரதானியை 0094718447305 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கும், தொழிலாளர் நலன்புரி ஆலோசகரை 0094716833513 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கும், தொழிலாளர் நலன்புரி சேவைகள் இரண்டாம் செயலாளரை 0094719742095 என்ற என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கும் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நியாயப் போராட்டத்திற்கு மீண்டும் ஓர் அதிரடி வாய்ப்பு

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர் ஆணையர் இலங்கைக்கு வருகை தரவிருக்கின்றார் என்பது நாட்டின் தற்போதைய மனித உரிமை சூழலுக்குப் புதிய வெளிச்சம் வீசும் வாய்ப்பு எனக் கருதப்படுகிறது. கடந்த பத்தாண்டுகளாக, இலங்கை மனித உரிமை மீறல்களுக்காக, குறிப்பாக 2009 இறுதிப் போரில் கட்டத்தில் இடம்பெற்ற கொடூரங்கள், கட்டணக் கொலைகள், விவசாயிகள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் போன்ற விடயங்களில் சர்வதேசக் கவனத்தை ஈர்த்து வருகிறது.**

**2021 மற்றும் 2022–ஆம் ஆண்டுகளில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இலங்கை அரசுக்கு மிகச்சிறந்த சீர்திருத்த வாய்ப்புகளை வழங்கின. ஆனால் இவை பெரும்பாலும் வார்த்தைகளில் மட்டுமே நிலைத்தன. விடுதலைப் புலிகளின் பெயரில் தமிழர்களுக்கு மேல் மேற்கொள்ளப்பட்ட கொடூரங்கள் தொடர்பான விசாரணை, காணாமல் ஆக்கப்பட்டோரின் நியாயம், சுயாதீன நீதித் தீர்வுகள், பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு, மற்றும் தேசிய புனரமைப்புத் திட்டங்களில் உண்மையான ஆளும்தரப்பு அக்கறை காணப்படவில்லை.**

**இந்நிலையில், ஐ.நா. உயர்நிலை ஆணையர் வருகைதந்து இருப்பது, நீதிக்கு பக்கம் நிற்கும் அனைவரும் அதிகாரப்பூர்வமாகக் கோரவேண்டிய சூழலை உருவாக்கியுள்ளது. அவர் இலங்கையில் இருக்கின்ற இந்த சில நாட்களில், பின்வரும் முக்கியக் கோரிக்கைகள் உரிய அதிகாரிகளிடம் வலியுறுத்தப்பட வேண்டும்:**

**1. ஐ.நா. தீர்மானம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும்.**

**2. சுயாதீன மற்றும் சர்வதேச கண்காணிப்புடன் கூடிய விசாரணை அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.**

**3. பாதிக்கப்பட்டோருக்கு நீதியும் இழப்பீடும் வழங்கப்பட வேண்டும்.**

**4. பாதுகாப்புப் பிரிவுகள் மீது நம்பிக்கை மீட்கும் நோக்கில் மறுசீரமைப்புகள் செய்யப்பட வேண்டும். ஐ.நா. ஆணையரின் வருகையை ஒரு போதுமான மரியாதை செலுத்தும் வரவேற்பாக மட்டுமல்லாது, நியாயம் நிலைநாட்டப்பட வேண்டிய ஒரு கடமைக்கான அழைப்பாக அரசாங்கம் கருத வேண்டும். எவரும் சட்டத்திற்கு மேல் அல்ல; எவருக்கும் நீதியை மறுக்க இயலாது என்பதனையே இந்தக் காலம் உரைக்கும்.**

**இலங்கையின் சர்வதேச நம்பிக்கையை மீட்டெடுக்கவும், மதிப்பைக் கண்டுபிடிக்கவும், மனித உரிமைகளுக்குப் புதிய மரியாதை தரவும், ஐ.நா. மனித உரிமை பேரவையின் பரிந்துரைகளை அரசாங்கம் முழுமையாக நிறைவேற்ற வேண்டும். இல்லையெனில், சர்வதேச விசாரணை ஒன்றே நியாயத்திற்கான வழி என்ற நிலைப்பாட்டை நாடும் மக்கள் அதிகரித்தே தீர்வார்கள்.**

**இது ஒரு சமூகநீதிப் போராட்டம். இது மனிதநேயத்தின் அழைப்புக் குரல். ஆளும்தரப்பு செவிசாய்க்க வேண்டிய தருணம் இதுவே!**

# வாடகைக்கு வாகனங்களைப் பெற்று மோசடியாக விற்ற இருவர் கைது

வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்று அவற்றுக்கு போலியான ஆவணங்களை தயாரித்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல்மாகாண வடக்கு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் கடவத்தை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கொழும்பு, அனுராதபுரம், பாணந்துறை உள்ளிட்ட பல பிரதேசங்களில் இந்த மோசடி சம்பவங்களில் ஈடுபட்டுள்ளமை ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹர பிரதேசத்தில் மேல் மாகாண வடக்கு பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு வெள்ளிக்கிழமை இரவு மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. இவர்கள் வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்று அவற்றின் இலக்கதகடுகளை மாற்றி போலியான ஆவணங்களை தயாரித்து விற்பனை செய்து வந்துள்ளமை விசாரணைகளில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 30 மற்றும் 36 வயதுடைய மாளிகாவத்தை மற்றும் ஹொரனை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

23 கிராம் 650 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் போலியான முறையில் தயாரிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்கள் தேசிய அடையாள அட்டைகள் வருமான உறுதிப்பத்திரங்கள் அண்மையில் பதிவு செய்யப்பட்ட இரு வாகன இலக்கதகடுகள் மற்றும் 5 கைத்தொலைபேசிகள் என்பவற்றுடன் சந்தேகநபர்கள் முச்சக்கரவண்டியொன்றில் பயணித்துக்கொண்டிருந்த போது இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

குறித்த சந்தேகநபர்கள் அனுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வேன் ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்று அதனை 104 இலட்சத்துக்கு விற்பனை செய்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலும் கொழும்பு பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில காரொன்றை வாடகைக்கு பெற்று அதனை 90 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளனர். இதனிடையே பாணந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கார் ஒன்றை வாடகைக்கு பெற்று அதன் இலக்க தகடு மற்றும் செசி இலக்கம் என்பவற்றை மாற்றி 58 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளனர்.

மோரகஹென பிரதேசத்தில் காரொன்றை வாடகை அடிப்படையில் கொள்வனவு செய்து அதனை 50 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளனர். மேலும் வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் காரொன்றை பெற்று அதனை 42 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்கள் மஹர நீதவான் நீதிமன்றில் ஆஜரப்படுத்தபடவுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் கடவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# துருக்கிய கடற்படை கப்பல் கொழும்பில்

துருக்கிய கடற்படைக் கப்பலான 'டி.சி.சி. புயுகடா' உத்தியோகபூர்வ பயணமாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. நேற்று சனிக்கிழமை நாட்டை வந்தடைந்த இக்கப்பல் இலங்கை கடற்படை மரபுகளுக்கமைய வரவேற்கப்பட்டது.

இக்கப்பலானது 99.56 மீற்றர் நீளமும், மொத்தம் 147 அங்கத்தவர்களை கொண்டதாகும், கப்பலின் கட்டளை அதிகாரியாக லெப்டினன்ட் கமாண்டர் அனில் பில்கின் பணியாற்றுகிறார்.

இக்கப்பல் நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில் அதன் பணிக்குழுவினர் நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று முக்கியமான இடங்களைப் பார்வையிடவும், இரு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையேயான நட்பை மேம்படுத்துவதற்காக இலங்கை கடற்படை ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் திட்டமிட்டுள்ளது.

மேலும் இக்கப்பல் தனது உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக்கொண்டு நாளை திங்கட்கிழமை நாட்டிலிருந்து புறப்பட உள்ளதுடன், மேலும் இலங்கை கடற்படைக் கப்பலுடன் மேற்கு கடற்படை கட்டளைப் பகுதியில் கடற்படைப் பயிற்சியில் ஈடுபடவும் திட்டமிடப்பட்டுள்ளது.




வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384

## பொய்யும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கலன்களில் காணப்பட்ட பொருட்கள் தொடர்பில் இவர்களால் எவ்வாறு பொறுப்புக் கூறமுடியும்? அந்தப் பொறுப்பை யார் ஏற்பது?

வரவு – செலவு திட்டத்தில் கூறப்பட்டதைப் போன்று ஓய்வு பெற்றோரின் சேமிப்புப் கணக்குகளுக்கான 3 சதவீத வட்டியும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால் இதற்கு முன்னர் சகல ஆளும்தரப்புக் களிலும் கட்சி பேதமின்றி ஓய்வு பெற்றவர் களுக்காக 15 சதவீத வட்டி கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. எனினும் தற்போது அந்தக் கொள்கை நடைமுறைப்படுத்தவில்லை.

முந்தைய ஆட்சி காலங்களில் பொய்களும் ஊழல் மோசடிகளுமே நடைமுறையிலிருந்ததாக தற்போதைய ஆளும்தரப்பு குற்றஞ்சாட்டியது. ஆனால் அதே முறைமையையே இந்த ஆளும்தரப்பும் பின்பற்றுகின்றது. இதுவா மக்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட முறைமை மாற்றம் என கேள்வியெழுப்புகின்றோம். இனியாவது மக்களை முட்டாள்களாக்குவதை நிறுத்துமாறு வலியுறுத்துகின்றோம் என்றார்.

## அமெரிக்காவே ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றவாளி எனவும், அமெரிக்காவின் கைகளில் குருதி தோய்ந்திருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

காஸாவில் இடம்பெற்றுவரும் இனவழிப்புக்கு எதிராக மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் ஒன்றிணைந்து நேற்று சனிக்கிழமை (14) நண்பகல் 12.00 மணிக்கு கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகத்துக்கு முன்பாக அமைதியான முறையிலான கவனயீர்ப்புப்போராட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

அமெரிக்கத்தூதரகத்துக்கு முன்பாக நேற்று முன்தினமும் (13) இவ்வாறானதொரு எதிர்ப்புப்போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில், நேற்றைய தினமும் தூதரக முன்றலில் பொலிஸார் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தனர்.

இருப்பினும் இஸ்ரேலினால் காஸாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் இனவழிப்புக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்ட மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகப்பிரதிநிதிகள், மதகுருமார், பலஸ்தீன ஆதரவாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள், பலஸ்தீனத்தில் மக்கள் முகங்கொடுத்துவரும் பேரழிவின் காட்சிகளையும், 'அமெரிக்காவே, நீதான் பிரதான குற்றவாளி. உனது கைகளில் இரத்தம் தோய்ந்திருக்கிறது' எனும் வாசகமும் எழுதப்பட்ட பதாகையை ஏந்தியிருந்தனர்.

அத்தோடு 'அதிகாரம் மிக்க உலகநாடுகளுக்கு சமாதானம் தேவையில்லை. ஏனெனில் அவர்கள் போரின் ஊடாகவே வாழ்கிறார்கள்', 'பலஸ்தீன மக்களுக்கு அவர்களது நிலம் வேண்டும்', 'பலஸ்தீனத்தை விடுவியுங்கள்', 'மக்களை இடம்பெயர்வதற்கு நிர்பந்தப்படுத்தியதைத் தவிர போர் வேறெதனையும் தரவில்லை' எனும் வாசகங்களுடனான பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

அத்தோடு சிலர் பலஸ்தீனக் கொடியையும், இரத்தம் தோய்ந்த சடலம் போன்று துணிகளால் சுற்றப்பட்ட பொம்மைகளையும் ஏந்தியிருந்தனர்.

## துரோகியென...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது கிழிந்துவிட்டது – என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ். சாவக்கச்சேரியில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு தழுவிய ரீதியில் உள்ளூராட்சி சபைகள் அமைக்கப்பட்டு வருகின்றது. வடக்கிலும் இதற்குரிய நடவடிக்கை இடம்பெறுகின்றது. தெற்கில் கடைபிடித்த அணுகுமுறையை இதுவிடயத்தில் நாம் வடகிழக்கில் கடைபிடிக்கவில்லை. இங்கு நடுநிலை வகித்தோம்.

நாம் வாக்கெடுப்பில் பங்கேற்றிருந்தால் இங்குள்ள தமிழ்க் கட்சிகளின் கனவு சிதைக்கப்படும். மனக்கோட்டை, மண்கோட்டையாக மாறிவிடும் என்பதை சொல்லி வைக்க விரும்புகின்றோம்.

இங்கு யார் ஆட்சி செய்தாலும் அந்த ஆட்சிக்கு நாம் உதவியாக இருப்போம். ஏனெனில் மக்களுக்கு சேவை செய்வதே எமது முதன்மை நோக்கமாகும். உள்ளூராட்சி சபைகள் ஊடாக மக்களுக்கு கிடைக்கப்பெறும் சேவைகள் சரியாக சென்றடைய வேண்டும். அதற்காக எமது உறுப்பினர்கள் தீவிரமாக செயற்படுவார்கள்.

அதேபோல ஊழல், மோசடிகள் இடம்பெறும் பட்சத்தில் அவற்றை தடுத்து நிறுத்துவதற்கும் எமது உறுப்பினர்கள் செயற்படுவார்கள். மக்களை ஏமாற்றும் அரசியலை நாம் முன்னெடுக்கவில்லை. சாக்கடை அரசியல் செய்யவும் தயாரில்லை. அவ்வாறு செய்ய நினைத்திருந்தால் யாழ். மாநகரில் இன்று வேறொரு நபரே மேயராக வந்திருக்கக்கூடும்.

கடந்த காலங்கள் முழுவதும் தமிழ்த் தேசியப் பரப்பில் இருந்து ஓரங்கட்டப்பட்ட – துரோகிகள் என முத்திரை குத்தப்பட்ட – ராஜபக்சக்களின் காலை நக்கி பிழைக்கின்றவர் எனக் கூறப்பட்ட – மக்களுக்கு எதிராக அராஜாங்களை கட்டவிழ்த்துவிட்டவர் – ஊடகவியலாளர்களைக் கொன்றவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் கூட்டு சேரும் நிலைமை காணப்படுகின்றது. இதனை மக்களும் இன்று புரிந்துகொண்டுள்ளனர்.

மக்கள் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள் வதற்காக அல்ல, தமது காவாலித்தனமான அரசியலை தக்கவைத்துக்கொள்வதற்காகவே இவர்கள் இவ்வாறு ஆசியமைக்கின்றனர்.

இப்படியானவர்கள்தான் தேசிய மக்கள் சக்தியை இனவாதகக் கட்சியெனவும், வாக்களிக்க வேண்டாம் எனவும் பிரச்சாரம் செய்தனர். ஆனால் அவர்கள் யாரென்பது தற்போது அம்பலமாகியுள்ளது.

அதேபோல தெற்கிலும் கூட்டுக்களவாணிகள் கூட்டு சேர்ந்து ஆட்சியமைக்கின்றனர். கடந்த காலங்களில் ஒருவரையொருவர் எப்படி விமர்சித்துக்கொண்டனர். ஆனால் வெட்கம் இல்லாமல் – அதிகாரத்துக்காக – கொள்கை துறந்து கூட்டு சேர்கின்றனர் – என்றார்.

## மருந்துப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருந்துத் தட்டுப்பாட்டுக்கு ஒரு தீர்வை வழங்காமல், மக்களின் அடிப்படை உரிமையையும் மனித உரிமையையும் ஆளும்தரப்பு மீறி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சுமத்தியுள்ளார்.

மருந்து தட்டுப்பாடு தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டு எதிர்க்கட்சி தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :

நாட்டில் பல அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றன. இந்தப் பிரச்சினைக்கு ஆளும்தரப்பு விரைந்து தீர்வு காணவேண்டும். இலவச சுகாதாரம் என்பது மக்களின் மனித உரிமையாகும். இலவச சுகாதார கட்டமைப்பினுள் வினைதிறனான சேவைகளைப் பெறுவது நாட்டு மக்களுக்கு அடிப்படை உரிமையாக அமைந்து காணப்பட்டாலும், இத்தருணத்தில் நமது நாட்டின் சுகாதார கட்டமைப்பில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அறுவை சிகிச்சை உபகரணங்கள் உள்ளிட்ட மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவுவதே இதற்குக் காரணமாகும். புற்றுநோய் நோயாளிகள், இதய நோயாளிகள், உயர் இரத்த அழுத்த நோயாளிகள், சிறுநீரக நோயாளிகள், நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தும் மருந்துகளுக்கும், வலி நிவாரணிகள் மற்றும் புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளுக்கும் கடுமையான தட்டுபாடு நிலவுகின்றன. கிடைக்கும் தகவல்களின் பிரகாரம் 180 க்கும் மேற்பட்ட மருந்துகளுக்கு இவ்வாறு தட்டுப்பாடு நிலவுகிறது.

மருத்துவமனை கட்டமைப்பில் நிலவும் மருந்து தட்டுபாட்டுப் பிரச்சினைய நாடாளுமன்றத்தில் நான் முன்வைத்தேன். இலவச சுகாதாரப் பராமரிப்பின் கீழ் அரச மருத்துவமனைகளுக்குச் சென்றாலும் நோயாளர்களுக்கு மருந்துகள் கிடைப்பதில்லை. தனியார் மருத்துவ நிறுவனங்கள் மூலம் அதிக விலைக்கு மருந்துகளைப் பெற வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதனை இலவச சுகாதார சேவையாக கருத முடியாது. மாறாக கட்டணம் செலுத்தும் சுகாதார சேவையாகவே காணப்படுகின்றன.

நமது நாட்டின் நலன்புரி பொருளாதாரம் மற்றும் நலன்புரி அரசில் இலவச சுகாதார சேவைகளை திறம்பட செயல்படுத்த அமைச்சர், அமைச்சின் அதிகாரிகள் மற்றும் ஒட்டுமொத்த ஆளும்தரப்பும் முழு மூச்சோடு பாடுபட வேண்டும். மருந்து தட்டுப்பாட்டுக்கு ஒரு தீர்வை வழங்காமல், மக்களின் இந்த அடிப்படை உரிமையையும் மனித உரிமையையும் ஆளும்தரப்பு மீறி வருகின்றது. ஆளும்தரப்பு எந்த தீர்வையும் வழங்காத ஒரு கொள்கையையே பின்பற்றி வருகிறது. இது குறித்து நாடாளுமன்றத்தில் வினவப்பட்டாலும், அரசாங்க தரப்பில் இருந்து இதற்கு எந்த தீர்வுகளும் வழங்கப்படவில்லை.

மக்களின் உயிருக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ள இந்நேரத்தில், நாட்டு மக்களை உயிருடன் வைத்திருக்கத் தேவையான மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். பல ஆண்டுகளாக நடைமுறையில் காணப்படும் விலைமனு செயல்முறையை மட்டும் சுட்டிக்காட்டாமல், இந்த மருந்துப் பிரச்சினைக்கு அவசரத் தீர்வை ஆளும்தரப்பு முன்வைக்க வேண்டும். மக்களின் உயிர்வாழ்வை உறுதி செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாக அமைந்து காணப்படுவதனால், மனித உயிர்களைக் கருத்தில் கொண்டு இந்த கடுமையான பிரச்சினைக்கு உடனடி தீர்வு வழங்குமாறு வலியுறுத்துகின்றோம் – என்று தெரிவித்துள்ளார்.

## உயிர்களைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளுக்கு பாடசாலை வாகன ஒழுங்குபடுத்துனர்களுக்குத் தேவையான உபகரணங்களை விநியோகிக்கும் நிகழ்வும் பிரதமரின் தலைமையில் இதன்போது நடைபெற்றது. நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்ததாவது:

இந்தத் திட்டத்தை கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தால் மேற்கொள்ளப்படும் மற்றொரு முக்கியமான திட்டம் என்று குறிப்பிடலாம். வீதி விபத்துகள் இன்று நாட்டில் பெரும் பேரழிவாக மாறியுள்ளன. இதில் கவலைதரும் விடயம் என்னவென்றால் எமக்கு தேவையும் அர்ப்பணிப்பும் இருந்தால் இவை அனைத்தும் தடுக்கப்படக்கூடியவை என்பதாகும்.

வீதி விபத்துகளால் தினமும் ஏழு பேர் இறக்கின்றனர். இந்தத் துயரத்தை நாம் நிறுத்தவேண்டும். வீதி விபத்துகளில் இறப்பவர்கள் ஊனமுற்றவர்கள் அல்லது காயமடைந்தவர்கள் அனைவரும் இந்த நாட்டின் குடிமக்களே. ஒருவரின் தாய், தந்தை, சகோதரன், சகோதரி அல்லது குழந்தை விபத்தில் சிக்கினால் அது அவர்கள் அனைவரையும் பாதிக்கிறது. இந்த விபத்து புள்ளிவிவரங்கள் வெறும் எண்ணிக்கைகள் அல்ல. அவை ஒரு பெரிய கதையை எமக்குச் சொல்கின்றன.

வீதி விபத்துகளைத் தடுப்பது என்பது சட்டத்தைக் கடைப்பிடிப்பது மட்டுமல்ல மற்றவர்களைப்பற்றிச் சிந்திக்கும் உயிர்களைப் பாதுகாப்பதை தனது பொறுப்பாகக் கருதும் இரக்கத்துடன் செயற்படும் ஒரு சமூகத்தை உருவாக்குவதும் அவசியம். ஆளும்தரப்பு அத்தகைய அழகான நாட்டை உருவாக்கவே முயற்சிக்கிறது.

தண்டனைக்கு முன் கல்விச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன் முன்னுதாரணம். குற்றச்சாட்டுக்கு முன் கவனம் ஆகியவை அவசியம்.

பெற்றோர்கள் முன்மாதிரியாக இருக்கவேண்டும். சாரதிகள் உயிர்களைப் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் இருக்கவேண்டும். போக்குவரத்து விதிகள் குறித்துப் பிள்ளைகளுக்குத் தெளிவூட்டுவதைப் போன்றே சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பு பொலிஸார் மக்களுக்கு அதுபற்றி விளிப்புணர்வூட்டவேண்டும் என்றார்.

## இனவாதத்தைத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரும் பிவிதுரு ஹெல உருமயவின் தலைவருமான உதயகம்மன்பில தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜே.வி.பி.யின் செயற்பாட்டாளர்களே என்னை கைது செய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அரசாங்கத்தின் பல்வேறு தவறுகளை நான் ஆதாரத்துடன் நாட்டுக்கு வெளிப்படுத்துவதால் தான் என்னை கைது செய்வதற்கு தீவிர முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. நான் இனவாதத்தைத் தூண்ட முயற்சித்ததாகக் குறிப்பிட்டு சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சட்டத்தின் கீழ் என்னை கைது செய்ய ஆளும்தரப்பு திட்டமிட்டு வருகிறது.

இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டால் நீண்ட காலம் பிணை இன்றி என்னை விளக்கமறியலில் வைக்க முடியும் என்பதே அரசாங்கத்தின் திட்டமிடலாகும். அந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகவே எனக்கெதிராக இரு ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சோதனையின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் என்னிடம் வாக்குமூலம் பெற்று அதன் பின்னர் கைது செய்வதே இதன் நோக்கமாகும்.

ஆனால் ஆளும்தரப்பின் திட்டத்துக்கமைய என்னை கைது செய்ய முடியாது. காரணம் என் மீது அவ்வாறு எந்தக் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படவில்லை. நான் எந்தவகையில் இனவாதத்தை தூண்டியிருக்கின்றேன் என்பதை இவர்கள் முதலில் தெளிவுபடுத்த வேண்டும். கொள்கலன்களில் ஆயுதங்கள் இருந்ததாக நான் கூறியதாகத் தெரிவித்தனர். ஆனால் இது தொடர்பில் சுங்க அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அமில சஞ்சீவவினால் தான் முதன் முதலில் சந்தேகம் வெளியிடப்பட்டது.

அரசுத் தலைவர் தனது ஜேர்மன் பயணத்தின் போது விடுதலைப் புலிகள் அமைப்பின் நெடியவன் என்பவரை சந்திக்கவிருப்பதாக சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியாகியிருப்பதாக நான் தெரிவித்திருந்தேன். இதனை அடிப்படையாகக் கொண்டும் என்னை கைது செய்ய முடியுமா என்று கலந்தாலோசித்து வருகின்றனர். என்னை எவ்வாறு கைது செய்வது என்பது குறித்து சிந்திப்பதை விடுத்து, வெளியாகியுள்ள இந்த செய்திகள் குறித்து உண்மையை வெளிப்படு;த்துமாறு அரசுத் தலைவர்யிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

எவ்வாறிருப்பினும் ஆளும்தரப்பு திட்டமிடுவதைப்போன்று என்னை ஒருபோதும் கைது செய்ய முடியாது. நான் ஒரு சட்டத்தரணி என்பதால் மிகுந்த அவதானத்துடன் சொற்களை அல்லது வசனங்களைப் பிரயோகிப்பேன். பிள்ளையானைப் போன்று என்னையும் சட்டத்துக்கு விரோதமாக கைது செய்து, மக்களுக்கு உண்மைகளை வெளிப்படுத்துவதை தடுத்து வைப்பதற்கு ஆளும்தரப்பு திட்டமிட்டிருக்கக் கூடும். உதய கம்மன்பிலவை சிறையிலடைப்பதாவோ சுட்டுக் கொல்வதாகவோ கூறி மிரட்ட முடியாது என்பதை அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவிடம் தெளிவாகக் கூறிக் கொள்கின்றேன் என்றார்.

## உள்ளூராட்சிமன்ற ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங் களிலுள்ள உள்ளூராட்சிமன்றங்களுக்கான தலைவர்கள், பிரதித் தலைவர்களைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின்போது குறித்த உள்ளூராட்சிமன்றங்களுக்கான ஆணையாளர்கள் சர்வாதிகாரத்துடன் செயற்படுகின்றனர். இந்தத் தெரிவுகள் தொடர்பில் பொது நிர்வாக அமைச்சினால் ஆலோசனை வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதற்கமைய இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமா இல்லையா என்பது குறித்துக் கருத்துக் கோரல் பகிரங்கமாகவே முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கு இரகசியக் கருத்துக் கோரலைக் கோரமுடியாது. உறுப்பினர்கள் பகிரங்கமாகத் தமது கைகளை உயர்த்தி வாக்களிக்க வேண்டும். ஆனால் குருணாகல், புத்தளம், அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் உள்ளூராட்சி ஆணையாளர்கள் ஆளும்தரப்புக்குச் சார்பாக அதன் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தவறான முறைமையை நடைமுறைப்படுத்துகின்றனர்.

இது தொடர்பில் எதிர்க்கட்சி என்ற ரீதியில் கடும் நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். இது தொடர்பில் பொது நிர்வாக செயலாளருக்கு தெளிவுபடுத்தியிருக்கின்றோம். உள்ளூராட்சிமன்ற சட்டங்களுக்கமைய செயற்படுமாறு வலியுறுத்துகின்றோம். நீதிமன்றத்தை நாடி இந்த அநீதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம். அத்தோடு கொழும்பு மாநகரசபை மேயர், பிரதி மேயர் தெரிவுக்கான வாக்கெடுப்பின் போது ஆணையாளர்கள் முறையாக செயற்படுவார்கள் என்று நம்புகின்றோம் என்றார்.

# உலகின் தனித்துவ சமையல் கலை நாடாக இலங்கை மாறவேண்டும்

## விருப்பப்படுகின்றார் பிரதமர்

சுற்றுலாப் பயணிகளின் விருப்புக்குரிய இடமாக மட்டுமல்லாமல் அனுபவங்களைத் தேடிச் செல்லும் உலகின் தனித்துவமான சமையல் கலையைக் கொண்ட நாடாக இலங்கையை இன்னும் கவர்ச்சிகரமானதாக மாற்ற நாம் பாடுபடவேண்டும் என்று பிரதமர் ஹரிணி தெரிவித்தார்.

பண்டாரநாயக்கசர்வதேசமாநாட்டுமண்டபத்தில் நடைபெற்ற இலங்கை சமையல் கலைஞர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'சமையல் கலை உணவு கண்காட்சி 2025' இன் தொடக்க நிகழ்வில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உணவுஎன்பதுவெறும்போசணைக்கானஒருவழிமுறையாகமட்டுமன்றிஒருநாட்டின்கலாசாரம்அழகான நினைவுகள் சுதேச அடையாளம் மற்றும் உரிமைகளின் சக்திவாய்ந்த வெளிப்பாடாகவும் இருக்கும் என்பதை நினைவில் கொள்வது அவசியம். இலங்கை இயற்கை அழகால் மட்டுமன்றி சுவையும் படைப்பாற்றலும்சிறந்துவிளங்கும்இடமாகநாட்டைநிலைநிறுத்துவதில் சமையல் முக்கிய பங்கு வகிக்கிறது.

சமையல்கலைஉணவுகண்காட்சியில்இலங்கையின் தொழில்முறை சமையல்காரர்கள், பயிலுனர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் போட்டியிடுவதோடு மட்டுமல்லாமல்ஒருவருக்கொருவர்கற்றுக்கொள்ளவும் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளவும் வெளிநாடுகளைச் சேர்ந்த சமையல்காரர்களுடன் உறவுகளை உருவாக்கவும் ஒரு முக்கிய இடமாக மாறியுள்ளது. இது ஒரு கண்காட்சி என்பதைப் பார்க்கிலும் மேலானது. திறமை பாரம்பரியம் ஒத்துழைப்பு மற்றும் உணவு ஆகியவற்றால் ஈர்க்கப்பட்ட எல்லையற்ற படைப்பாற்றலின் கொண்டாட்டமாக மாறியுள்ளது.

# பொன்னாலை காட்டுக்குள் சிக்கியது 240 கிலோ கஞ்சா

பொன்னாலை காட்டுப்பகுதியூடாக கஞ்சா கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டு 240 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

அத்துடன் மாதகலைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் கூறப்படுகின்றது. இன்று சனிக்கிழமை மதியம் இச்சம்பவம் இடம்பெற்றது.

போதைப்பொருள்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து அவர்கள் மேற்கொண்ட விசேட கண்காணிப்பின்போது இந்த கஞ்சா கடத்தல் முறியடிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கஞ்சா வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னரும் பொன்னாலை இளைஞர்கள் இதேபோன்ற கஞ்சா கடத்தல் ஒன்றை முறியடித்து பெருந்தொகை கஞ்சாவை கைப்பற்றி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 3 பிள்ளைகளின் தந்தை இரவில் வெட்டிக்கொலை

கோப்பாய் பொலிஸ் பிரதேசத்துக்குட்பட்ட இருபாலை மடத்தடிப் பகுதியில் 3 பிள்ளைகளின் தந்தை வெள்ளிக்கிழமை இரவு வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையை இவ்வாறு வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார். தனிப்பட்ட தகராறு வாய் தெருக்கமாக மாறியதில் இந்த வாள்வெட்டு இடம்பெற்றதாக ஹோப்பாய் போலீஸ் நிலைய பொறுப்பு அதிகாரி தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அறிந்த கோப்பாய் பொலிஸார் துரித விசாரணைகளை முன்னெடுத்து வாள் வெட்டு தாக்குதல் நடாத்திய சந்தேகத்தில் இருவரை ஒரு சில மணி நேரத்தில் கைது செய்துள்ளனர்









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.06.2025இல் வெளியிடப்பெற்றது